## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

நான்காம் வருட முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2010/13
(2015 **Aug**)

[..]OS-**4103** இலங்கைப் புவியியல் *நேரம்: 3 மணித்தியாலங்கள்*

*[..]தி 1 இல் இருந்து இரு வினாவிற்கும் பகுதி 2 இல் இருந்து இரு வினாவிற்குமாக [..]லாமாக நான்கு (4) வினாக்களுக்கு மட்டும் விடை தருக.*

---

### பகுதி 1

1. அ. "இந்தியாவிலிருந்து பிரிந்த ஒரு நிலப்பகுதியே இலங்கை" இக் கூற்றின் பொருத்தப்பாட்டினை தகுந்த புவிச்சரிதவியல், தரைத்தோற்றவியல் அம்சங்களை உதாரணமாகக் கொண்டு விளக்குக. (12 புள்ளிகள்)

   ஆ. "இலங்கையின் தரைத்தோற்ற அமைப்பில் காணப்படும் சிக்கல்வாய்ந்த தன்மைகளே இத் தீவானது பல்வேறு பட்ட காலங்களில் பல்வேறு பட்ட புவியசைவுச் செயற்பாடுகளின் விளைவாக உருவாகியிருக்கலாம் என்று கருத வாய்ப்பளிக்கின்றது" இக் கூற்றுத் தொடர்பான உமது கருத்தினை உதாரணங்களுடன் நியாயப்படுத்துக. (13 புள்ளிகள்)

2. அ. காலநிலை மூலக்கூறுகள் எவையெனக் குறிப்பிட்டு இலங்கையின் வெப்பநிலை, மழைவீழ்ச்சி ஆகியவற்றில் காணப்படும் காலம், இடம் சார்ந்த வேறுபாடுகளை பொருத்தமான தரவுகளை முன்வைத்து விளக்குக. (15 புள்ளிகள்)

   ஆ. அண்மைக்காலங்களில் இலங்கையின் காலநிலையில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் பற்றி எடுத்துரைக்குக. (10 புள்ளிகள்)

3. இலங்கையின் முக்கிய வானிலைப்பருவங்களை எடுத்துக் காட்டி அவற்றை நிர்ணயிப்பதில் காலநிலையைக் கட்டுப்படுத்தும் காரணிகள் எவ்வாறு தொடர்பு பட்டுள்ளது என்பதனை ஆராய்க. (25 புள்ளிகள்)

### பகுதி 2

4. இலங்கையின் பொருளாதாரத்தின் பலம், பலயீனம், சந்தர்ப்பம், அச்சுறுத்தல் ஆகியவற்றை நுணுகி ஆராய்க. (25 புள்ளிகள்)

5. அ. 1931 இல் இருந்து இன்று வரை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் நில அபிவிருத்தி, நீர்ப்பாசனத்திட்டங்களின் சாதனைகள், குன்றபாடுகள் தொடர்பாக சுருக்கமாக விளக்குக. (15 புள்ளிகள்)

   ஆ. இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட நிலச்சீர்திருத்த நடவடிக்கைகள் மற்றும் சட்டங்கள் எந்தளவிற்கு எதிர்பார்த்த இலக்கை எட்டியுள்ளது என்பதனை நுணுகி ஆராய்க. (10 புள்ளிகள்)

6. வறுமைத்தணிப்பில் இலங்கை மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளின் தாக்கத்தினை, விளைவுகளை விமர்சன ரீதியாக ஆராய்க. (25 புள்ளிகள்)